**12 P**

Register No

# அரையாண்டுத் தேர்வு – 2023

## தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

**I. பலவுள் தெரிக** 14 x 1 = 14

1) இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப்பேசுகின்ற இலக்கண நூல்
அ) யாப்பருங்கலக் காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ)நன்னூல்

2) உவா உற வந்து கூடும் உடுபதி இரவி ஒத்தார் - யார் யார்?
அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன் சவரி

3) கடலின் பெரியது
அ) உற்ற காலத்தின் செய்த உதவி ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி இ)தினையளவு செய்த உதவி

4) காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள்
அ) போர்க்கருவி ஆ) தச்சுக் கருவி இ) இசைக் கருவி ஈ) வேளாண் கருவி

5) வேறுபட்டதைக் குறிப்பிடுக
அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு இ) நடுக் காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு

6) அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது
அ) கடந்த காலத் துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை இ) பச்சையம் இழந்த நிலத்தை ஈ) அனைத்தையும்

7) கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள் அ) ஆய் ஆண்டிரனும் அதிகனும் ஆ) நல்லியக் கோடனும் குமணனும் இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்.

8) உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் இத்தொடரில் பெயரெச்சம் அ) உண்டு ஆ) பிறந்து இ) வளர்ந்த ஈ) இடந்தனில்

9) விளியறி ஞமலி -- இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது? அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

10) எளியது அரியது என்பன
அ) தீயினத்தின் துணை – நல்லினத்தின் துணை ஆ) சொல்வது சொல்லியபடி செய்வது
இ) சிறுமை பல செய்வது – பகைவர் தொடர்பு ஈ) மெய்ப்பொருள் காண்பது – உருவுகண்டு எள்ளாதது.

11. 'சாபவிமோசனம்' அகலிகை கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்
அ) கு.அழகிரிசாமி ஆ)புதுமைப்பித்தன் இ)ஜெயமோகன் ஈ)எஸ். இராமகிருஷ்ணன்.

12. இலக்கணக் குறிப்பு ஆடலும் பாடலும்
அ) எண்ணும்மை ஆ) பண்புத் தொகை இ) வினைமுற்று ஈ)உம்மைத் தொகை

13. படிமம் என்பதன் பொருள் அ)சொல் ஆ) செயல் இ)காட்சி ஈ) ஒலி

14. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் காரணம்
அ) நேரடி மறைமுக வேலை வாய்ப்புகளின் களம் ஆ)மென்பொருள், வன்பொருள், வாகனஉற்பத்தியில் பங்கு
இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை ஈ)அ, ஆ, இ அனைத்தும்

**பகுதி – II பிரிவு – I**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக** 3 x 2 = 6

15. மயிலை, சீனி, வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் - தருக

16 பருவத்தே பயர்செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

17. பின்னனி இசை படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.

18. இடையீடு – எவற்றைக் குறிப்பீடாகக் குறிப்பிடுகிறது?

**பிரிவு – 2**

**எவையேனும் இரண்டனுக்கு விடை அளி** 2 x 2 = 4

19. மூச்சு நின்று விட்டால் பேச்சும் அடங்கும் - கவிதைக்குப் பொருத்தமான பழமொழி ஒன்றை எழுது

20. குறியீட்டு உத்தியில் ஒரு புதுக்கவிதை எழுதுக?

21. நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது?

**பிரிவு – 3**

**எவையேனும் ஏழுனுக்கு விடை தருக** 7 x 2 = 14

22. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக
மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்.

23. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. பலகை

24. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க. புல் - புள்

25. கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக. விண் மீன், ஒளிர், எரி, விழு

26. தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக
வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்.

27. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக 1. பெருங்கடல் 2. எத்திசை

28. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக. 1. அறுத்து 2. சாற்றி

29. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக. நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்.

30. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக
என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான் அவர்கள் எல்லாபிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trbtnpsc.Com

பகுதி – 3 பிரிவு – 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக** 2 x 4 = 8

31. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.
32. தாயுமைத் தந்தையாக ஏற்று இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.
33. ஈசன் மகன் நின்றனா ஓர் ஏழையென ஓர்மின் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
34. யானை புக்க புலம்போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே – உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.

**எவையேனும் இரண்டனுக்கு விடை அளி** 2 x 4 = 8

35. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்துஉங்கள் கருத்தை எழுதுக.
36. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?
37. வாயிலோயே எனத் தொடங்கும் ஒளவையாரின் புறநானூற்றுப் பாடல் பாடாண் திணைக்குஉரியது என்பதை நிறுவுக
38. சினத்தால் வரும் கேட்டினைக் கூறுக

எவையேனும் மூன்றனுக்கு விடை அளி 3 x 4 = 12

39. அகலாது அணுகாது கிக்காய்வார் போல்க
இகல் வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார்.
இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக

**அல்லது**

தொழில் உவமை அணியைத் தகுந்த உதாரணத்துடன் - விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக
பூமிச்சருகாம் பாலையை
முத்துபூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே – கோடிப்
புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை – செலுத்தி
இரவலரோடு பேசுவேன்!
இரவெரிக்கும் பரிதியை – ஏழை
விறகெரிக்க வீசுவேன்.
- நா. காமராசன்

41. பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.
42. தமிழாக்கம் தருக.
Periyar was not only a great social revolutionary he was something more than that . He is known as a great champion of the under privileged; even in this sphere he was much more than that. His sphere of activity was very wide and when he look up any issue he went deep into it under stood all the aspects of it and did not rest until he had found a permanent solution to it Communal difference in our society were deep tooted and appeared to be permanent features of our society until periyar came on the scene.

43. காது கேளாதவர்களுக்கான மாற்று வினா
கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி
தஞ்சாவூர் செயின்ட் பீட்டர்ஸ் பள்ளித் தலைமையாசிரியரின் பேருதவியால் மா.இராசமாணிக்கனார் தனது பதினைந்தாவது வயதில் ஆறாம் வகுப்பில் சேர்ந்து படிப்பைத் தொடர்ந்தார். மிகுந்த பொருளாதார நெருக்கடியில் கல்வி பயின்ற அவர் தொடர்ந்து ஆறு ஆண்டுகள் பள்ளியிலேயே முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றதோடு மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்திய பண்டித தமிழ்த் தேர்விலும் முதல் மாணவராகத் தேர்ச்சியடைந்து அனைவரின் பாராட்டையும் பெற்றார். பின்பு எழுத்தர், பள்ளி ஆசிரியர், பல்கலைக் கழக ஆசிரியர் என வளர்ந்தார் அவர்தான் இலக்கியம், சமயம், வரலாறு கல்வெட்டு போன்ற துறைகளில் மிளிர்ந்த தமிழறிஞர் மா. இராசமாணிக்கனார்.

1. மா. இராச மாணிக்கனார் எந்த பள்ளியில் ஆறாம் வகுப்பில் சேர்ந்தார்?
2. அவர் எவ்வாறு தேர்ச்சி பெற்றார்?
3. அவர் எவ்வாறு வளர்ந்தார்?
4. அவர் எந்தெந்த துறைகளில் மிளிர்ந்தார்?

43. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக
1. ஆணி அடித்தாற் போல
2. வழி வழியாக

**எவையேனும் மூன்றனுக்கு விடை அளி** 3 x 6 = 18

44. கோடை மழை கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப் பண்புகளை விளக்குக
45. நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
46. திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் - நிறுவுக
47. திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின்சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக.
48. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க
49. **அடி பிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக** 4 + 2 = 6
'பாதகர்' எனத் தொடங்கும் இரட்சணிய யாத்திரிகம் பாடலை எழுதுக.
'செயல்' என முடியும் குறட்பாவை எழுதுக.



Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com